திரு. எஸ். நல்லசாமி: தலைவரவர்களே, குடிசைமாற்று வாரியம் தலைநகரில்தான் இருக்கிறது. கிராமப்புறங்களுக்குக் குடிசைமாற்றுவாரியத் திட்டத்தை விஸ்தரிக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை என்று சொன்னார்கள். அப்படியானால் ஜில்லாத் தலைநகர்களுக்கும், தாலுகா தலைநகர்களுக்குமாவது இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தமிழ்நாடு ஒன்றிலேதான் இந்தக் குடிசைமாற்று வாரியம் இருக்கிறது; மற்ற எந்த மாநிலங் களிலும் இல்லை. கிராமப்புறங்களுக்கு இப்போது இத்திட்டம் விரிவுபடுத்தப்பட இயலாது. ஆனால் மாவட்டத் தலைநகர்களுக்கு விஸ்தரிக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது. ஒருசில மாவட்டத் தலைநகர்களில் இப்போது நடைமுறையில் இருக்கிறது.

ஆலயங்களில் கவிதை அரங்கம்

* 122 **வின—திரு. கா. வேழவேந்தன்:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) ஆலயங்களில் கவிதை அரங்கம் நடத்தி கவிஞர்களுக்குப் பரிசளிக்கும் திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக் கோயிலில் ஆவணி மூலத்தில் நடக்கும் திருவிழா ஒட்டி கவிதைப் போட்டி நடத்தி கவிஞர்களுக்குப் பரிசளிக்கும் ஒரு திட்டம் உருவாகி இருக்கிறது. இந்த ஆண்டு வருகிற ஆவணி மூலத் திருநாள் அன்று இந்த விழா முதல் முறையாக நடைபெற இருக்கிறது. கவிதைக்கு உரிய பொருள் ஏற்கனவே அறிவிக்கப் பட்டுள்ளது. கவிதை அனுப்பக் கடைசி தேதி 31—7—1973 ஆகும். சிறந்ததெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைக்கு 1,001 வெண்பொற் காசுகள் பொற்கிழிப் பரிசாக அளிக்கப்படும். ஆசிரியர் பாராட்டும் பெறுவர்.

1973 ஆகஸ்ட் 13]

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, மதுரையிலே மட்டும் கவியரங்கம் நடப்பதாகச் சொன்னார்கள் இந்த சிறந்த திட்டத்தை தமிழ்நாட்டிலே இருக்கிற நிதிவசதி படைத்த எல்லா ஆலயங்களிலும் செயல்படுத்தி, கவிஞர் சமுதாயத்தை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மதுரையில் முதலில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பிறகு மற்ற ஆலயங்களிலும் இந்தத் திட்டத்தைப் புகுத்துவதுபற்றி யோசிக்கலாம்.

Incentives for production of honey.

* 123 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the details of the incentives provided in regard to the production of honey during 1971-72 and 1972-73 in this State ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : விவர அறிக்கை @ ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ் : அவைமுன் வைக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையில் அரிசன நல நிதியிலிருந்து தனி உதவி பெறும் ஐந்து மாவட்டங்களை கதர்-கிராமத் தொழில் வாரியம் தேர்ந்தெடுத்திருக்கிறது. ஆனால் அதிகமாக தேன் உற்பத்தி செய்கின்ற கன்னியாகுமரி மாவட்டம் அதில் இடம் பெறவில்லை. எனவே, இந்தத் தனித் திட்டத்தை கன்னியாகுமரி மாவட்டத்திலும் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இந்த தேன் சேகரிக்கின்ற திட்டம் எந்தெந்த முறையிலே நடத்தப் படுகிறது என்ற விபரம் இந்தக் குறிப்பில் கொடுக்கப்பட்டிருக் கிறது. கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்தும் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கலாம்.

@ 277–280-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப் பட்டுள்ளது.